உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க !!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க.] விக்ரம ஆவணி [இதழ் ரு.

வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் செங்கோல் வேல்க !
இமிழ்முர சேழிலி பெய்க ! யாவரும் யாவும் உய்க !
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க !
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக ! நன்றே !

தமிழணங்கு வணக்கம்.

சொல்லே ருழவர் உளவயலிற்
சோம்பற் களையைக் களைந்துபுலத்
துறைநீர் பாய்ச்ச வளர்ந்தநறுஞ்
சுவைவிஞ் சியசெங் கரும்பாவாய் !

அல்லெனப்புல் லியவலைமேல்
அடரும் இடராந் திடர்மோதி
ஆசைச் சுழல்காற் றிடைவிரகத்
தடங்கா வடவைக் கொடுங்கனலின்

தொல்லைக் குடைந்தென் மனத்தோணி
துகளிற் சிதைவாய் மறதியெனும்
சுறவின் பகுவாய் புகுவேனுன்
துணைத்தா ளிணையே புணைகண்டாய்

நல்லோர் நிறையும் பெருவாழ்வை
நாயேற் கருள்செய் தாயாகி
நாடு நலங்கொள் தமிழரணே
நாடி நடங்கொள் தமிழணங்கே !

ஆ. மா. சிவஞானம்.

மாணவ ரந்தாதி.

திரு. L. S. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள்
தமிழ்ப் புலவர்,
முனிசிபல் ஹைஸ்கூல் திருப்பத்தூர். வ. ஆ.

52-ம் பக்கத் தொடர்ச்சி.

இயற்றுக வாதித் தொடக்கம் சிறிய தெனினுமது
பயிற்றுக பின்னர் பெரியதாய் நிற்கும் பலதுளிநீர்
வியப்புறு மாறாய் விளங்குமால் நுண்விதை வேந்தருநீள்
கயப்படையோடார் நிழல்மர மாமெழில் காண்குமினே. (14)

காணுக பாண்டித் துறையவர் செந்தமிழ்க் கல்வியகம்
சேணுறு பற்பலர் பண்டித ராகத் திகழ்ந்ததனைப்
பேணினர் நான்காம் மதுரைத் தமிழவளர் பேரவைபா
வேணிகர் மாணவ ரேஇதைப் போல்பிற வேண்டுமினே. (15)

வேண்டுமின் நும்மன சாக்கியைக் கொண்டு விரோதமிலா
மாண்தரு செய்கையைச் செய்குமின் வையகம் வாழவழி
காண்குமின் இன்ப நிறைநிலை யாவரும் கையுறவே
ஆண்தகை மாணவ ரேபுகல் நீதி யறிந்தினிதே. (16)

அறிந்து கிராமமுன் னேற்ற மடைந்திட வாறறிவு
செறிந்து நிலவிடக் கல்வியை யீகுவீர் தேயமெலாம்
நிறைந்த பயிர்த்தொழில் ஓங்கப் புதுமுறை நேரியதாய்ச்
சிறந்து பரவிட மாணவ ரேநலம் செய்குமினே. (17)

செய்யுமின் கைத்தொழில் மேனாட் டவர்முறை செப்பியுழைத்
துய்யுமின் நம்நாட் டெளியவர் சீர்பெற உன்னியுன்னி
வய்யுமின் கைத்தொழில் சாலைகள் பற்பல வான்செறியத்
தய்யுமின் விண்கலம் மாணவ ரேமுறை தான்தெரிந்தே. (18)

தெரிந்தோவ் வொருகிரா மத்தினு மாலையில் தேடரிதாய்
விரிந்த எழில்படக் காட்சிகள் மூலமாய் மேனகரார்
புரிந்துள கைத்தொழில் கல்வியே ஆதியாப் போற்றுமுறை
தெரிந்திடக் காட்டுமின் மாணவ ரேநீர் தினந்தினமே. (19)

தினந்தினம் செந்தமிழ் நன்னிலை எய்திடச் செய்தகவி
இனந்தரு மீனாட்சி சுந்தரன் நந்தமக் கீந்ததமிழ்
வனந்தரு தென்றலில் செம்மாந் திருந்தெழில் மாட்சியுறக்
கனந்தரு மாணவ ரேஇருந் தேகலை கற்குமினே. (20)

(தொடரும்.)

மலை நலம்.

வித்வான் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை
அவர்கள், செங்கம்.

102-ம் பக்கத் தொடர்ச்சி.

நம் தண்டமிழ் நாட்டு மலைகளில் காடும் செடியும் மண்டிக் காணுறைகள் தோன்றுவன பல இருப்பினும், பனி மூடிய முடியுடையனவும், நீர் நிலை நிறைந்தனவுமாகிய வரைத்தொடர்கள் குறிப்பிடத் தக்க அளவில் இல்லை; அதனாற்றான் அவை சான்றோரால் புகழப்பட வில்லை. தமிழ்ச் சான்றோர் பாட்டுக்களில் வரும் மலைகள் யாவும் காடடர்ந்தும், விலங்கினஞ் செறிந்தும், புயல்படிந்தும் தோன்றுகின்றனவே யன்றிவேறில்லை.

தொகை நூல்களிற் பாடல்சான்ற மலைகளுள் இமயமலை ஒன்று தமிழ்நாட்டின் பண்டைய எல்லையில் இம்மலை இல்லையாயினும், இதன் சிறப்பு, தமிழ்ச்சான்றோர் உள்ளத்து நின்று பாட்டுப் பல பாடப்பெறும் பான்மை யெய்தியிருந்தது.

"கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்" (பதிற். 11)

"கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை
வடதிசையெல்லை இமயமாக" பதிற். 43)

எனவும்,

" ... ... அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தியந்தணர் அருங்கடனிறுக்கும்
முத்தீவிளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டிமயமும் பொதியமும்" (புறம். 2)

"வடாஅது பனிபடுநெடுவரை வடக்கும் (புறம். 6)

"இமயத் தீண்டி யின்குரல்பயிற்றிக்
கொண்டல்மாமழை பொழிந்த நுண்பல் துளியினும் பல"
[(34)

" ... ... ஓங்கிய
வரையளந்தறியாப் பொன்படு நெடுங்கோட்
டிமயம்" (புறம். 39)

"குமரியம் பெருந்துறை யயிரைமாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின்." (—67)

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனைபருகி யயல
தகரத் தண்ணிழல் வதியும்
வடதிசையதுவே வான்றோய் இமயம்." (132)
"மழையண் ணுப்ப நீடிய நெடுவரைக்
கழைவளர் இமயம் போல" (புற. 166)
இமயத்துக் கோடுயர்ந் தன்னதம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடுமாய்தல் தவத்தலையே" (புற. 216)
... ... பாடான்று
எழிலிதோயும் இமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட்டிமயத் தன்ன
(யானை) (369)
" ... ... மன்னி,
அமைவரல் அருவியார்க்கும்
இமயத்துப்பரும் விளங்குக எனவே" (கலி. 105)
"உடனமர ராயமோ டவ்விசும் பாயும்
மடநடைமாவினம் அந்திடமையத்
திடன்வட்டியங்கா இமயம்" (கலி. 92)

எனவும்

நிலந்தாழ்மருங்கிற் றெண்கடல் மேய்ந்த
விலங்குமென் தூவிச் செங்காலன்னம்
பொன்படு நெடுங் கோட்டிமயத்துச்சி
வானரமகளிர்க்கு மேவலாகும் (நற். 356)

எனவும்

"பேரிசையிமயமும் துளக்கும் பண்பினை"

எனவும்

பாராட்டப்படுதலைக் காண்கின்றோம்.

இமயமலை நம்பெருநாட்டின் வடக்கின் கண்ணது என்பதும், இதன் முடி பொன்னிறமுடையது என்பதும், இது பனி மூடி, மழைவளஞ் சிறந்து அருவிதாழும் பெருமைமிகக் கொண்டது என்பதும் அவர்கள் பொறித்தனவாகும். இதன்கண் கடவுள் நிலை பெற்றுள்ளார். இது ஆரியர் வாழும் இடமுடையது; அவர் தம் முத்தீவிளக்கத்தால் மானினம் உறங்கும்; மேகக் கூட்டம் இமய வரையைச் சூழ்ந்து பெருமழை பொழியும்; அருவிகள் பெருகி வழி யும். இமயம் அளக்கலாகா உயரமுடையது. இமயத்தில் நரந்தம் புல் மிக்கிருக்கும்; அதனைக் கவரிமான்கள் மேயும். அன்னப் பறவை கள் அழகுறத் தங்கியிருக்கும் அமைதியுடையது இவ்வண்ணமே, குடைவரை, பொதியம் முதலிய பெருமலைகளும், வேங்கை, குதிரை, நாஞ்சில், ஏழில், கொல்லி, பறம்பு முதலாகப் பல மலைகள் புலவர் பாடும் புகழ்பெற்றிருக்கின்றன.

உ

வெற்றிவேலுற்ற துணை.

தமிணழுங்காசிரியர் பாட்டனார் முருகேச முதலியார் எனப்பெயரிய

ஆரணி ஆனைகட்டி அவல்தார் முனிசாமி முதலியார்

அவர்கள் இயற்றிய

பொருள் விளக்க நிகண்டு.

தமிழ் வளர்ச்சியின் மேன்மையை விரும்பும் மொழிப்பற்றுடையார் யாவரும் இங்கு வெளியிடப்பெறும் பொருள் விளக்க நிகண்டின் இன்றியமையாமையை நோக்கி, அதனை வரவேற்பார்களாக.

விநாயகர் துதி.

1. உலகளித் தாண்ட ழிக்கும் ஒருதனி முதல்வ னார்க்குத்
தலைமக னாக வந்த தந்திமா முகனைப் போற்றி
நிலவிய பொருள்வி ளக்க நிகண்டென ஒருசொல் பல்வே
றிலகிடு பொருளாய்க் காட்டும் இத்தமிழ் இயம்ப லுற்றேன்.

சுப்ரமண்யர் துதி.

2. பொன்னுல குறைவோர்க் கின்னல் புரிந்தசூர் தடிந்த வைவேல்
பன்னருஞ் சிறப்பின் மிக்க பாலனும் சுப்ர மண்யன்
முன்னவன் முன்னோன் தேவி மூவர்நெஞ் சகத்து லாவும்
பொன்னடி போற்று வார்க்குப் புகுவினை புரித லுண்டோ!

பாயிரம்.

3. உலகெலா மளித்த வென்றாய்க் கொருபுற முதவு மெங்கை
பலகலை நவின்ற ஞான்று பகர்ந்தமா நிகண்டின் பின்னர்
நிலவுசீர் வழிசார் பாக நேர்ந்தபன் னிகண்டிற் றேர்ந்த
நலனுறு பிங்கலந்தை நவில்திவா கரமுரிச்சொல்.

4. கிளர்புகழ் சிறந்த வேத கிரிநிகண் டோடு செந்தில்
வளநகர் சிவப்ர காச வையர்மண் டலவர் வாக்கும்
அளவில்சீர் சங்க நாற்க ளரும்பத மகரா திச்சொல்
அளியெனக் கொடுபன் னாளும் அலகினை யுரைக்க லுற்றார்.

அவையடக்கம்.

5. கண்கவர் வனப்பின் மாண்ட கடவுள்தன் படைப்பை மான
மண்ணவர் மண்ணு லாற்றும் மாணுரு வழுக்கென் றெள்ளார்
நண்ணுநா வலர்பாப் போல நாணிகந் துரைத்த வென்சொல்
எண்ணறு மேச தேனு மிகழ்ந்திடா துலக மன்றே!

6. சிலையிற் சிற் பியர்தஞ் செய்கை சிவமென விளங்கிநிற்கும்
நலமிலென் புன்சொல் கற்கும் நற்சிறார்க் கறிவு றுத்தும்
கலைவலா ரிதனை யுன்னிக் கரிசுறின் ஒழித்திந் நூலைச்
சிலையுரு வாகக் கொண்டு சிறப்புறச் செய்வ ரன்றே!

7. திருவருண் மாண்பி னாலே சிலையுரு சிவமாய்ப் பூசை
மருவியும் பேணு வோர்க்கு மாற்றரும் ஞானந் தந்தும்
வரமுறச் செயலும் போல வரமிலா வெனதிப் புன்சொல்
முருகன தருளால் மண்மேல் முற்பட நிற்கு மன்றே!

ககர எதுகை.

தோத்திரம்.

மணிமலி முடியோ ராறு மஞ்சிகை யாறி ரண்டும்
அணிவிழி யறுமூன் றோடு மாறிரு காமுந் தண்டை
கணிலென வதிர்க ழற்பூண் கந்தவே ளடிகள் போற்றி
அணிபெறு ககர மன்னு மாதியா மெதுகை சொல்வாம்.

நூல்.

1. பகஞ் செல்வம் வீரங் கீர்த்தி பத்ரம்வை ராகம் வித்தை
பகராறு குணங்க ளுற்றோன் பககுணன் பகேச னோடு
பகவனும் பகவான் ஈசன் பகவதி யுமைக்குஞ் சீர்பேர்
பகவன்மால் அருகன் புத்தன் பதிவிதிக் குபசா ரப்பேர்.

இதன் பொருள்.

பககுணன், பகேசன், பகவன், பகவான் என்பவை பகம்-பக மென்று, பகர்-சொல்லப்படுகின்ற, செல்வம், வீரம், கீர்த்தி, பத்திரம், வைராகம், வித்தை எனும், அறுகுணங்கள்-ஆறு குணங்களை, உற்றோன்-பொருந்தியவனாகிய, ஈசன்-சிவபெருமானுக்கும், பகவதி-பகவதியென்பது, உமைக்குப்-உமா தேவிக்கும், சீர் பேர்-சிறப்புப்

பெயராகும், (அப்பெயர்களில்) பகவன்-பகவன் என்பது மட்டும், மால்-விண்டுவிற்கும், அருகன்-அருகதேவனுக்கும்,புத்தன்-பௌத்த தேவனுக்கும், பதி-குருவிற்கும், விதி-பிரமனுக்கும் உபசாரப்பேர்-உபசாரமாக் அழைக்கப்படுகிற பெயராம் என்றவாறு. 1.

2. ககங்கக மாறல் பக்கி கணையொரு பாஷா ணப்பேர்
பகனடு நாண்மு கூர்த்தம் மதியாணி பரிதி தேசு
பகல்செய லத்த யாமம் பகுப்புசூள் பிளப்பு பாகு
மகரமங் கதமில் வன்மீன் மலர்த்தாது சுறவு காதல்.

ககம் என்பது:—

ககமாறல்	மணக்கத்தாளிக்கும் (மூலிகை அகராதி)	
பக்கி	பட்சிக்கும்	பிங்கலந்தை 2393
கணை	அம்புக்கும்	உரிச்சொல் நிகண்டு 219—142
ஓர் பாஷாணம்	சரகண்ட பாஷாணத்திற்கும் பேர் (மூலி. அ.)	

பகல் என்பது:—

நடு	மையத்திற்கும்
நாள்	தினத்திற்கும்
முகூர்த்தம்	மூன்றே முக்கால் நாழிகைக்கும்
மதியாணி	நுகத்தின் நடுவாணிக்கும் (புறப். வெண். வாகை 3.)
பரிதி	சூரியனுக்கும்
தேசு	ஒளிக்கும்
பகல்	பகற் காலத்திற்கும்
செயல்	செய்கைக்கும் (அரும். பொ. க. 39)
அத்தயாமம்	அர்த்தசாமத்திற்கும் (சிலப்பதிகாரம் 118—6)
பகுப்பு	பங்கிடலுக்கும் (திவா. 208, திருமுரு. 166 மதுரைக் 653)
சூள்	சத்தியத்திற்கும் (பதிற்று. 90. புறம். 17)
பிளப்பு	பிளத்தலுக்கும் (திவா. 208)
பாகு	பாக்கினுக்கும் பெயர் (அரு. க. 39)

மகரம் என்பது:—

அங்கதம்	தோளணிக்கும் (சிந்தா. நாம. 170, 351.)
இல்	ஒரு ராசிக்கும்
வன்மீன்	முதலைக்கும்
மலர்த்தாது	பூந்தாதுக்கும்
சுறவு	சுறாமீனுக்கும்
காதல்	ஆசைக்கும் பெயர்.

3. சிகரிகோ புரமே வெற்பு சிறெலி முடிநா ரைப்பேர்
சிகழிகை யொலிய லேவா சிகைமயிர் முடிதே மாலை
சிகரஞ்சுக் கலேகோ டுச்சி சிதரெகின் கொடிகல் சாகை
மகம்யாகம் விழவோர் நாளாம் மகன்தவன் முளைவீரன்பேர்.

சிகரி என்பது:—

கோபுரம் கோயில், நகர்களின் வாயலுக்கும் (உ. ரி. நிக. 235)
வெற்பு மலைக்கும்
சிறெலி சிறும் எலிக்கும் (பிங்கலந்தை 3513)
பிங். 2513 சிறெலி, காரெலி, அகழெலி, இல்லெலி என எலிவகை 4.
முடி கிரீடத்திற்கும் (அரும். க. 22)
நரை கருநாரைக்கும் பெயர் (பிங். 3513)

சிகழிகை என்பது:—

ஒலியல் மாலைக்கும்
வாசிகை கோத்தமாலைக்கும்
மயிர்முடி மயிர்முடிக்கும் (பிங். 3514)
தேமாலை தொடுத்தமாலைக்கும் பேர்

சிகரம் என்பது:—

சுக்கு நாகரத்திற்கும் (மூலி 138)
அலை திரைக்கும்
கோடு மலையுச்சிக்கும்
உச்சி தலைக்கும்
சிதர் திவலைக்கும்
எகின் மானமாவிற்கும்
கொடி காக்கைக்கும்
கல் மலைக்கும்
சாகை வட்டிலுக்கும் பெயர் (பிங். 1249)

மகம் என்பது:—

யாகம் வேள்விக்கும்
விழவு திருவிழாவிற்கும்
(மாசிமகம் என்புழிமகம் திருவிழாவை யுணர்த்திற்று)
ஓர்நாள் மகநட்சத்திரத்திற்கும் பேர்

மகன் என்பது:—

தவன் கணவனுக்கும் (சிலப் 381)
முளை புத்திரனுக்கும்
வீரன் வீரனுக்கும் பெயர் (புறப்பொருள் 14)

4. குக்குடம் பறவை நாகம் கோழியு மிருபே ராகும்
குக்கலே இரும லுச்சி குகைமுழை முனிவர் வாசம்
அக்கரம் லிகிதம் ஓர்நோய் அக்காரம் குளமே யாடை
எக்கல்போர் குவையே யூர்தி யேறலே சொரிதல் எட்டல்

குக்குடம் என்பது:—

பறவைநாகம்	சிறகுடைப்பாந்தளுக்கும் (பி. 3377. அரு. க. 23)
கோழி	காலாயுதத்திற்கும் (பி. 3377) பேர்

குக்கல் என்பது:—

இருமல்	கடியநோய்க்கும் (குக்கனோய் எனல் உலகவழக்கு)
உச்சி	நாய்க்கும் பெயர்

குகை என்பது:—

முழை	மலைக்குகைக்கும்
முனிவர்வாசம்	முனிவர் இருப்பிடத்திற்கும் பேர்.

அக்கரம் என்பது:—

லிகிதம்	எழுத்திற்கும் (அரு. க. 37)
ஓர்நோய்	அட்சரம் எனும்நோய்க்கும் பேர் (அள்ளச்சரம் உலக வழக்கு)

அக்காரம் என்பது:—

குளம்	வெல்லத்திற்கும் (வே. 29)
ஆடை	சேலைக்கும் பேர் (ஷை)

எக்கல் என்பது:—

போர்	யுத்தத்திற்கும் (ஷை)
குவை	குவித்தலுக்கும் (பி. 3222)
ஊர்தியேறல்	வாகனமேறுதலுக்கும் (அரு. க. 15)
சொரிதல்	சொரிதலுக்கும் (பி. 3222)
எட்டல்	எட்டுதலுக்கும் பேர் 4.

5. இகல்மற நிலைதெவ் வொப்போ டிகலெனல் வலிபோர் தெற்றே
புகரொளி குரால்கேழ் சொன்றி புரைமலை யருவி கொக்கு
நிகாறு வனப்பு சுங்கன் நிருமத முகப்புள் ளிப்பேர்
ககனம்புட் கரங்கான் பல்புள் கருதுமோர் மூலம் தானே.

இகல் என்பது:—

மறநிலை	பெருங்காப்பியத் துறுப்பு ளொன்றுக்கும்
தெவ்	பகைக்கும் (பி. 3156)
ஒப்பு	உவமைக்கும்
இகல் எனல்	இகல் என்றேவலுக்கும்
வலி	வலிமைக்கும் (பி. 3156)
போர்	யுத்தத்திற்கும் (ஷை)
தெற்று	மாறுபாட்டிற்கும் பேர் (திருமுரு. 131)

புகர் என்பது:—

ஒளி 1.	பிரகாசத்திற்கும்
குரால்	புற்கெனும் நிறத்திற்கும் (பி. 1936)
கேழ்	நிறத்திற்கும் (பெரும்பா. 194)
சொன்றி 2.	புகர்விற்கும் (உணவு 111 புறப்பொ)
புரை	குற்றத்திற்கும்
மலையருவி 3	மலையினின்றிழியு மருவிக்கும்
கொக்கு 4	கொக்கிற்கும்
வனப்பு 5	அழகிற்கும் (சிலப் 214—20)
சுங்கன்	வெள்ளிக்கும்

நிருமத முகப்புள்ளி—யானைமுகப் புள்ளிக்கும் பேர்.

ககனம் என்பது:—

புட்கரம்	ஆகாயத்திற்கும்	அரு.
கான்	காட்டிற்கும்	க.
பல்புள்	எல்லாப் பறவைகளுக்கும்	22
ஓர் மூலம்	ஆகாயக் கருடன் கிழங்கிற்கும்	பி. 3852.
தானை	சேனைக்கும் பேர்	

1, 2, 3, 4, 5. அரும்பொருள் ககரம் 25.

6. திகிரிதேர் வெதிர்யாழ் வட்டம் தேருரு ளாழி வெற்பாம்
சிகிஎன்ப பரிபு ரந்தீ தீதுறு கேது மஞ்சை
நெகிழிதீ யரிபு லிங்கம் நெகிழ்ந்தெனல் அரணிகொள்ளி
எகினநாய் புளிமா நீர்நாய் *எகின்புளி கவரியன்னம்
(பிங். 3637, 3515, 3593, 3221.)

*எகினன்னம் கவரிசிந்தம் என்பதும் பாடம். சிந்தம்- புளியுமாம்.

(தொடரும்.)

125

சிலப்பதிகாரம்.

திரு. C. S. இராஜாப் பிள்ளை அவர்கள்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ஊறீஸ் கல்லூரி, வேலூர்.

அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் வழங்கும் ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று.

தமிழ்நாட்டைப் புகழ்ந்துபாடிய பாரதியாரவர்களும் இந்நூற் பெருமையை விளக்கி,'சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு,' எனப் புகழ்ந்திருக்கின்றார். இந்நூலாசிரியர் சேரநாட்டு மன்னனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது இளைய மகனும், சேரன் செங்குட்டுவற்கு உடன் பிறந்தவருமாவார். இவர் பெயர் இளங்கோவடிகள் என்பதாம். இவர் அரசர்குடிப்பிற்பிறந்தும் துறவு பூண்டொழுகியதால் இளங்கோவடிகள் என்றழைக்கப்பட்டார். இவரது பெருமையை 'யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை,' என அப்பாரதியாரே கூறிப்போந்தனர். சிலப்பதிகாரத்தும் இவர் வரலாறு:

'குணவாயிற் கோட்டத்தரசு துறந்திருந்த குடக்கோச்சேரல் இளங்கோவடிகட்கு,' எனக் கூறப்படுகின்றது.

இந்நூல் அரசநெறி பிழைத்தோரை அறமே கூற்றாகக்கொல்லும் என்பதும் புகழ்மிக்க கற்புடை மகளிரைப் பெரியார் போற்றுவர் என்பதும், பழவினை தவறாது பயனளிக்கும் என்பதும், ஆகிய இம் மூன்று மெய்ப்பொருளையும், காவிரிநாட்டுத் தலைநகராகிய புகார் நகரில் பெருங்குடிவாணிகன் மகளாகப்பிறந்து, கோவலனை மணந்து, இல்லறமாகிய நல்லறத்தைத் தூயநெறியில் நடத்திக் கணவன் பிரிந்த காலத்தும் அவனையே போற்றி, "சோமகுண்டம் சூரியகுண்டத் துறை மூழ்கிக் காமன் கோட்டம் வழிபடின் கணவனோடின்புறுவாய்," எனக் கூறிய பார்ப்பனத்தோழிக்கு'எம்போன்ற ஒரு தமிழ் மகட்குத் துறைமூழ்கலும்,பிற தெய்வம் போற்றலும் தகுதியன்றெ,' னக்கூறிக், கணவனுடன் மதுரை நகர் சென்று, சிலம்பு விற்கச் சென்ற கணவன் அரசனாற் கொல்லப்பட்டதை வைகைக் கரையில் உணர்ந்து கதிர்ச்செல்வனை வினவித் தன் நாயகன் கள்வனல்லன் என்பதைப் பலருக்கறிவித்து, விரைந்து மதுரையடைந்து, இறந்த தன் கணவனைத் தழுவி, அவன் வாய்மொழி கேட்டு, அரசன் தவறுணர்ந்து, மிக்க சினத்துடன் அரண்மனை வாயிலடைந்து, காவலாளனை "இறை முறை பிழைத்தோன் வாயிலோயே," என்றழைத்துத் தான் வந்த துணர்த்தி, உள்ளே சென்று "நீ யார்?" என வினவிய மன்னனை நோக்கித்

"தேரா மன்னா, செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன் கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடு நா நடுங்க
ஆவின் கண்மணி உகுநீர் நெஞ்சு சுடத் தான் தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப்புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச்சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ் கழல் மன்னா, நின்னகர்ப்புகுந்திங்கு
என் காற்சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதென் பெயரே,"

என விடைகூறி, அவன் செய்த தவறினைக் காட்சியிற் காட்டி, அவனை முடித்து, தன்னடி வணங்கிய மன்னன் மாதேவியையும் வெறுத்துத் தன் கற்பின் திறனால் மதுரைமாநகரை எரியூட்டிப் பின் ஆற்றொணாத்துயர் கூர்ந்து;

"குணதிசைவாயில் கணவனொடு போந்தேன்
குடதிசை வாயில் வறிதே பெயர்வேன்"

என்றுரைத்து, மதுரை கடந்து, மேற்றிசை நோக்கிச்சென்று, மலை நாடடைந்து, திருச்செங்குன்றென்னும் மலைமீது ஆண்டு வாழுங் குறவர் காண விண்ணுலகத்திலிருந்து விமானத்துடன் வந்த தேவ உருவினனாகிய தன் காதலனைக் கண்டு வணங்கி, அவனுடன் விண்ணுலகம் புக்க கண்ணகி தேவியின் சிறப்பைக் கூறும் வாயிலாக அறிவிக்கும் சீரிய நூலாகும்.

இந்நூல் சேர, சோழ, பாண்டிய நாட்டின் பண்டைச் சிறப்பையும், அந்நாட்டு வேந்தர்களின் ஆற்றலையும், அவர்களது மொழிப் பற்றையும், குடி புரக்குஞ் செங்கோற் பெருமையையும், நந்தமிழகத்துப் பண்டைக்கால விவசாயம், கைத்தொழில், வாணிபத் திறமைகளையும், நானிலச் சிறப்பையும், அக்கால மக்களின் கடவுள் வழிபாட்டையும், மத வேறுபாடு கருதாது மக்களனைவரும் கலந்து வாழ்ந்த சீரிய ஒழுக்க முறையையும், வேங்கடம், அரங்கம், ஆடகமாடம் முதலிய தெய்வத் தலங்களின் பெருமையையும், சோழநாட்டுக் கற்புடைமைகளிரின் நலத்தையும், இசை நாடக இயல்களையும், இன்னோன்னபல அரும் பொருள்களையும் விளக்கிக் கூறும் சிறந்த காப்பிய மென்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் நன்குணர்ந்து, பயின்று தெள்ளறிவுடையராக வேண்டுமென்ற நோக்கமே இவ்விரிவுரை எழுதத் தொடங்கியதற்குக் காரணமாகும்.

ஆகலின் இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் பின் தனித்தனியாக வெளிவரும்.

(தொடரும்)